**நிர்மாண உத்தரவாத நிதியம் - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நிர்மாண உத்தரவாத நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நிர்மாண உத்தரவாத நிதியத்தின் நம்பிக்கைப்பொறுப்பு உறுதியின் 11(ஈ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் ஆகியவற்றிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்கள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் நிதியத்திற்கு எதிராக தொடரப்பட்டுள்ள 07 வழக்குகளுடன் தொடர்புடைய ரூபா 53,287,995 பெறுமதி குறித்து கணக்குகளில் போதிய வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்படாதுள்ளதுடன் இந்த வழக்குகளிற்கான சட்டத்தரணிகள் கட்டணமாக ரூபா 1,453,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. | வழக்குகளிற்குரிய எதிர்காலச் செலவினம் மற்றும் தேவையான காலம் எவ்வளவு என்பதனை உறுதியாக நிச்சயிக்க முடியாதுள்ளது. | கணக்கீட்டு நியமத்தின் படி போதியளவு வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கணக்காண்டுக்கான வட்டியினை சரியாக கணிப்பிட்டிருக்காமை காரணமாக 07 திறைசேரி உண்டியல்களுக்கான வட்டி வருமானம் ரூபா 289,353 ஆல் அதிகரித்தும் 05 திறைசேரி உண்டியல்களுக்கான வட்டி வருமானம் ரூபா 255,758 ஆல் குறைத்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டில் இந்தச் சீராக்கம் திருத்தப்படும். | திறைசேரி உண்டியல்களுக்கான வட்டி வருமானம் திருத்தமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) கணக்காண்டுக்கான வட்டியினை சரியாக கணிப்பிட்டிருக்காமை காரணமாக 14 நிலையான வைப்புக்களிற்கான வட்டி வருமானம் ரூபா 4,745,162 ஆல் அதிகரித்தும் 04 நிலையான வைப்புக்களிற்கான வட்டி வருமானம் ரூபா 659,633 ஆல் குறைத்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டில் இந்தச் சீராக்கம் திருத்தப்படும். | கணக்காண்டுக்குரிய வட்டி வருமானம் திருத்தமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுதல் வேண்டும். |
| (இ) தொழில்நுட்பக் கல்லூரியொன்றுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ள ரூபா 494,600 பெறுமதியான நிலையான சொத்தொன்று காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் பெறுவனவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டில் இந்தச் சீராக்கம் திருத்தப்படும். | காசுப் பாய்ச்சல் கூற்று திருத்தமாக தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) நிதியத்தின் பிரதான இடர் அதன் கட்ன்பட்டோர் (Demand debtors) பெறுமதியில் தங்கியுள்ளமையால் அதற்காக ஒவ்வொரு ஆண்டும் 50 சதவீதத் தொகை நிகழத்தக்க பொறுப்புக்கள் நிதியத்திற்கு | 2020 ஆம் ஆண்டில் முன்னைய ஆண்டின் இலாபத்தை மீள அறவிட்டு நிகழத்தக்க பொறுப்புக்கள் கணக் | கணக்கீட்டுக் குறைபாடு திருத்தப்படுதல் வேண்டும். |

| | |
|---|---|
| மாற்றும் கொள்கைக்கு அமைய 2019 ஆம் ஆண்டில் ரூபா 61.3 மில்லியன் தொகை நிதியத்துக்கு மாற்றப்பட்டிருந்தது. இருப்பினும், மீளாய்வாண்டில், ரூபா 5.4 மில்லியன் தொகை கடன்பட்டோர் சார்பில் ஆண்டின் மிகைக்கு எதிராக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையால் ஒரு நோக்கத்திற்காக இரண்டு தடவைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | கை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6 செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேவைநாடுனர்களிடமிருந்து கிடைத்திருந்த (Transit Money) ரூபா 76,553,077 மீதியினுள் 2013 முதல் 2016 ஆம் ஆண்டு வரை தீர்க்கப்படாதிருந்த ரூபா 3,602,302 தொகையும் ரூபா 1000 இற்கு குறைந்த பெறுமதியுடைய 55 மீதிகளும் உள்ளடங்கியிருந்தன. | இடரைக் குறைப்பதற்காக ஒப்பந்தகாரர்களின் காசுத் தொகை தற்காலிகமாக நிர்மாண உத்தரவாத நிதியத்தின் வழிக் காசுக் (Transit) கணக்கில் வைப்புச் செய்யப்படுவதுடன் இடரைக் குறைத்துக் கொள்வதற்காக செயற்திட்டம் முடிவடையும் வரை வைத்துக் கொள்ளப்படுகின்றது. இந்தப் பணிக்கு பல ஆண்டுகாலம் எடுக்கலாம். | நீண்டகாலமாக தீர்க்கப்படாதுள்ள மீதிகளிற்கான காரணங்களைக் கண்டறிந்து பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை | இணக்கமின்மை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ)நிர்மாண உத்தரவாத நிதியத்தின் நம்பிக்கைப்பொறுப்பு உறுதி (i) 7 (b) ஆம் பிரிவு | நிதியம் 1999 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தற்போது 20 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், நிதியத்தின் செயற்பாடுகளிற்காக பொருத்தமான ஆட்சேர்புக்களை மேற்கொள்வதற்கும் அவர்களது சம்பளங்களை கணிப்பிடுவதற்காக தயாரிக்கப்பட்ட முறையான சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண முறைமைகள் மற்றும் அவர்களை ஆட்சேர்ப்பதற்கான தகைமைகளை உள்ளடக்கிய ஒழுங்கு விதிகள் நிதியத்திடம் காணப்படவில்லை. | தற்போது 2016/2021 வரை ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் சம்பளம், கூலிகள், தாபன மற்றும் நிர்வாகச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. | நம்பிக்கைப்பொறுப்பு உறுதியின் பிரிவின் படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) 5(a) ஆம் பிரிவு | நிதியத்தினால் பல்வேறுபட்ட பிணைமுறிகளை வழங்குவதற்காக அதிகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், நிர்மாண உத்தரவாத நிதியத்தினால் வழங்கப்படுகின்ற பிணைமுறிகளின் வீதத்தினை நிர்ணயிப்பதற்கான அடிப்டையினை உள்ளடக்கிய முறையான சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண முறைமையொன்று நிதியத்தினால் உருவாக்கப்பட்டிருக்கவில்லை.<br>காலநீடிப்புச் செய்யப்பட்டுள்ள பிணைமுறிகளிற்காக அறவிடப்பட்டுள்ள பிணைமுறி வீதங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட வீதங்களைக் காட்டிலும் குறைவாகக் காணப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன், பொருத்தமான முறையொன்றின் மூலம் வீதங்களை நிச்சயிக்காது தனியொரு நபரின் தீர்மானத்தின் மீது வீதத்தினை நிச்சயித்தலானது உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனமாகும் என்பது அவதானிக்கப்பட்டது. | பல்வேறு பிணைமுறிகளுக்காக பெற்றுக் கொள்ளப்படுகின்ற கட்டணங்கள் 1999 ஆம் ஆண்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் இது வரையிலும் அக்கட்டணங்கள் மாற்றமின்றிக் காணப்படுகின்றன. நிறுவன ரீதியான சேவைகள் பெறப்படாமையால் கட்டணங்கள் ஒரே மட்டத்தில் பேணப்பட்டு வருகின்றது. | நம்பிக்கைப்பொறுப்பு உறுதியின் பிரிவின் படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் கோவையின் நிதிப்பிரமாணம் 133 | பிரமாணத்தின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தின் கணக்கீட்டு நடவடிக்கைகளை பரிசோதிப்பதற்காக நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் உறுப்பினர்களை உள்ளடக்கிய குழுவொன்றின் மூலம் கணக்குகளைப் பரிசோதிப்பதற்காக ஆலோசனை வழங்கப்படுகின்றது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) 2019 சனவரி 12 ஆந் திகதிய DMA/01-2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் 5.3 ஆம் பந்தியின் படி அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் இந்த நிதியத்தின் நடவடிக்கைகள் கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நம்பிக்கைப் பொறுப்புச் சபை மற்றும் பதவியணியினரை உள்ளடக்கி முகாமைத்துவம், கணக்காய்வு உள்ளிட்ட சேவைகள் மேற்கொள்ளப்படுவதுடன் அந்தந்த சந்தர்ப்பங்களில் தேவையான திருத்தங்கள் அல்லது நல்வழிப்படுத்தல்களிற்காக தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 122,612,561 மிகையொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டுக்கான மிகை ரூபா 103,096,421 ஆகும். அதன்படி நிதி விளைவுகளில் ரூபா 19,516,140 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. பதவியணி வேதனாதிச் செலவினம் ரூபா 3,317,131 இனாலும் உட்கட்டமைப்புச் செலவினம் (Infrastructures) ரூபா 3,509,939 இனாலும் அதிகரித்திருந்த போதிலும், நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 7,255,708 ஆல் அதிகரித்திருந்தமை, திறைசேரி உண்டியல் வட்டி வருமானம் ரூபா 7,524,058 ஆல் அதிகரித்திருந்தமை மற்றும் ஐயக்கடன் ஒதுக்கீடு ரூபா 9,968,729 ஆல் குறைவடைந்திருந்தமை மேற்படி வளர்ச்சிக்கு பிரதான காரணங்களாக காணப்பட்டன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதியம் 1999 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2019 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ஏறத்தாள ரூபா 1,790 பிணைமுறிகள் வழங்கப் பட்டிருந்த போதிலும், இந்தப் பிணைமுறிகளை முறைப்படி நிர்வகிப்பதற்குத் தேவையான முகாமைத்துவ தகவல் முறைமையொன்று நிதியத்திடம் காணப்படவில்லை. இருப்பினும், தகவல் தொழில்நுட்பப் பிரிவொன்று புறம்பாகப் பேணப்பட்டு வருவதுடன் அதன் பணிகளிற்காக முறைமைப்படுத்தல் முகாமையாளர் ஒருவர் ஆட்சேர்க்கப்பட்டுள்ளார். | சிற்றளவு நிறுவனங்களிற்கு பொருந்தக் கூடிய தொழில்நுட்ப பிரிவொன்று முறைமைப்படுத்தல் முகாமையாளர் ஒருவரின் கீழ் பேணப்படுகின்றது. இதன்படி, கடந்த காலங்களில் கையால் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் (Manual) தற்போது பகுதியளவில் தன்னியக்க முறையில் மேற்கொள்ளப்படுகின்றன. | கணனி முறைமையினை மேலும் அபிவிருத்தி செய்தல் வேண்டும். |
| (ஆ) நிதியம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 1,790 பிணைமுறிகளை ஒப்பந்த தாரர் களிற்கு வழங்கியிருந்ததுடன், ஏனைய நிதி நிறுவனங்களைப் போன்று அதற்காக பிணை வைப்பொன்று ஒப்பந்த தாரர்களிடமிருந்து பெறப்பட்டிருக் காமையால் இடர் தன்மை அதிகமாகக் காணப்படுகின்றது. | வர்த்தக வங்கிகளிடமிருந்து பெற்றுக் கொள்வதில் காணப்படுகின்ற சிரமங்கள் காரணமாக மிகவும் இலகுவான நிபந்தனைகளின் கீழ் பிணைமுறிகளை வழங்குவதற்கு ஆரம்பத்திலிருந்தே கொள்கையொன்று பின்பற்றப்படுகின்றது. | இடரைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) கணனி முறைமையின் அபிவிருத்தி (Software Development) இற்காக 2015 ஆம் ஆண்டில் ரூபா 2,088,800 தொகை ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்திற்குச் செலுத்தப்பட் டிருந்தது. இருப்பினும், மீளாய் வாண்டு வரையிலும் இந்த முறைமை செயற்படுத்தப்பட் டிருக்கவில்லை. | ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனம் ஏறத்தாழ 60 சதவீதம் வரை இந்த முறைமையை பூரணப்படுத்தியுள்ளதுடன் இரு தரப்பினதும் ஒத்திசைவுடன் இந்த உடன்படிக்கை 2021 மே வரை காலநீடிப்புச் செய்யப்பட்டுள்ளது. | கணனி முறைமையினை அபிவிருத்தி செய்தல் துரிதப்படுத்தப்படுதல் வேண்டும். |